Thirukkovil Zone

# வலயக் கல்வி அலுவலகம், திருக்கோவில்
# Covid – 19 விடுமுறைகால விசேட கல்வி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - 2020
## தரம் 06

| விஞ்ஞானம் | நீர் ஓர் இயற்கை வளம் | 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1) உவர்திறன் கூடிய நீர் எவ்வாறு அழைக்கப்படும்
   1. உவர்நீர் 2. நன்னீர் 3. சவர்நீர் 4. கலங்கல் நீர்

2) புவியில் நுகர்வுக்கேற்ற நீரின் சதவீதமாக அமைவது
   1. 10% 2. 1% 3. 0.1% 4. 0.01%

3) கழிமுகங்களில் காணப்படும் நீர் எவ்வாறு அழைக்கப்படும்
   1. உவர்நீர் 2. நன்னீர் 3. சவர்நீர் 4. கலங்கிய நீர்

4) இரசாயனப் பொருட்கள் கலந்த நிலக்கீழ் நீரை குடிநீராக பருகுவதால் ஏற்படும் அபாயகரமான நோய்
   1. சிறுநீரக நோய் 2. காய்ச்சல் 3. வயிற்றோட்டம் 4. எலிக்காய்ச்சல்

5) புவி மேற்பரப்பில் காணப்படும் சமுத்திர மற்றும் கடல்நீரின் அளவு
   1. 2.58% 2. 97.41% 3. 0.01% 4. 100%

6) சமுத்திரங்கள் மற்றும் கடல்களில் காணப்படும் நீர் எவ்வாறு அழைக்கப்படும்
   1. நிலக்கீழ் நீர் 2. படிவு வீழ்ச்சி நீர் 3. மேற்பரப்பு நீர் 4. மேற்கூறிய எதுவுமில்லை

7) சோடியம் குளோரைட்டு எப்பதார்த்தத்தின் இரசாயனவியல் பெயர்
   1. பூசல்மா 2. கறியுப்பு 3. அப்பச்சோடா 4. பேதியுப்பு

8) திரவ நிலையில் காணப்படும் நீரிற்கு உதாரணமாக அமையாதது
   1. அருவிகள் 2. ஆறுகள் 3. ஏரிகள் 4. பனியாறு

9) வளிமண்டலத்தில் காணப்படும் நீரின் பௌதீக நிலையானது
   1. திண்மம் 2. திரவம் 3. வாயு 4. மேற்கூறிய யாவும்

10) பனியாறு (கிளசியர்) ஒன்றில் காணப்படும் நீரின் பௌதிக நிலை
   1. திண்மம் 2. திரவம் 3. வாயு 4. மேற்கூறிய யாவும்

11) மிகக் குறைந்த அளவில் உப்புக்கள் கரைந்துள்ள நீர் அழைக்கப்படும் முறை
   1. நன்னீர் 2. சவர்நீர் 3. உவர்நீர் 4. மேற்கூறிய யாவும்

12) அங்கிகளின் உடலை குளிர்த்தும் இயல்புடைய பதார்த்தமாக அமைவது
   1. நீர் 2. காற்று 3. உப்பு 4. எண்ணெய்

13) நீரின் முக்கியத்துவம் அல்லாதது
   1. பருகுவதற்கு 2. சக்தி உற்பத்தி 3. சுத்தப்படுத்தல் 4. எரிபொருளாக

14) உவர்திறன் அடிப்படையில் சவர்நீர், நன்னீர், உவர்நீர் என்பவற்றை ஏறுவரிசைப் படுத்தினால் கிடைப்பது
   1. சவர்நீர், நன்னீர், உவர்நீர் 2. நன்னீர், உவர்நீர், சவர்நீர்
   3. நன்னீர், சவர்நீர், உவர்நீர் 4. உவர்நீர், நன்னீர், சவர்நீர்

15) படிவுவீழ்ச்சி நீருக்கு உதாரணமாக அமைவது
   1. ஆற்று நீர் 2. கடல் நீர் 3. மழை 4. பனியாறு

(15× 2= 30 புள்ளிகள்)




kalvi.lk

## பகுதி – II

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

**01) வளிமண்டலத்தில் நீராவியுண்டு எனக் காட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இடைவெளி நிரப்புக**




**தேவையான பொருட்கள்** : கண்ணாடிக்குவளை, நீர், 01)………………………………, கடதாசி அட்டை

**செய்முறை :-**

கண்ணாடிக் குவளைக்குள் 2)……………………………. நிரப்புதல் வேண்டும். சில பனிக்கட்டிகளை இடுதல் வேண்டும். கடதாசி அட்டையால் 3)………………………. வேண்டும். சிறிது நேரத்தின் பின் கண்ணாடிக் 4)……………………………….. வெளி மேற்பரப்பை அவதானித்தல் வேண்டும்.

**அவதானம் :-**

கண்ணாடிக் குவளையின் 5)…………………………… நீர்த்துளிகள் தோன்றியிருக்கும்.


**முடிவு :-**

வளிமண்டலத்து 6)………………………….. ஒடுங்கி 7)…………………………………….. தோன்றியதிலிருந்து 8)………………………………….. நீராவி 9)……………………………….

**(பனிக்கட்டி, நீரை, மூடிவிடுதல், வெளிப்பகுதியில், நீராவி, நீர்த்துளிகள், வளிமண்டலத்தில், உண்டு, குவளை)**

(9× 2= 18 புள்ளிகள்)

**02) தரம் 06 மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை ஒன்றின் அமைப்பை படம் காட்டுகின்றது.**




01. இப்பரிசோதனையின் நோக்கம் யாது?
………………………………………………………………………………………………………………

02. இப்பரிசோதனையை மேற்கொள்ளத் தேவையான பொருட்கள் எவை?
………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………

03. இங்கு உமது அவதானங்கள் எவை?
………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………

04. நீரின் மூன்று நிலைகளையும் தருக?
………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………

05. இங்கு தொடச்சியாக வெப்பமேற்றும் போது அவதானம் யாது?
………………………………………………………………………………………………………………

06. வாயு நிலையில் காணப்படும் நீருக்கு உதாரணம் ஒன்று தருக.
………………………………………………………………………………………………………………


07. மேற்படி செயற்பாட்டின் மூலம் நீரின் நிலைகளில் ஏற்படும் மாற்றத்தை குறிப்பிடுக.
………………………………………………………………………………………………………………

(7× 2= 14 புள்ளிகள்)



kalvi.lk

**03) இயற்கையில் புவிக்கு பல்வேறு மூலங்களில் இருந்து நீர் கிடைக்கின்றது.**




01. X, Y, Z குறிக்கும் நீர் மூலங்களை இனங்கண்டு அவற்றிற்கான உதாரணம் ஒவ்வொன்றையும் குறிப்பிடுக.
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………


02. உவர்திறன் அடிப்படையில் நீரின் வகைகளை குறிப்பிடுக.
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

03. கடல் நீரின் உவர்தன்மைக்கு காரணம் யாது?
…………………………………………………………………………………………………………

04. சமுத்திர நீர், கிணற்று நீர், கழிமுக நீர் என்பவற்றை உவர்திறன் அடிப்படையில் ஏறுவரிசைப் படுத்துங்கள்.
…………………………………………………………………………………………………………

(3+3+2+ 2= 10 புள்ளிகள்)

**04) புவியின் மேற்பரப்பில் காணப்படும் நீரின் அளவை அடிப்படையாகக் கொண்டு வட்ட வரைபு தரப்பட்டுள்ளது**




01. இங்கு A, B, C என்பவற்றால் குறிப்பிடப்படுபவை எவை?
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

02. A, B, C ஐ சதவீதத்தில் குறிப்பிடுக.
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

03. நீர் விரயமாகும் சந்தர்ப்பங்கள் 2 குறிப்பிடுக
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

04. நீர் மாசடையும் முறைகள் எவை?
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

05. மாசடைந்த நீரை பருகுவதால் ஏற்படும் நோய்கள் எவை?
…………………………………………………………………………………………………………

(3+3+2+2+ 2= 12 புள்ளிகள்)



kalvi.lk

**05) நீர் ஓர் வரையறுக்கப்பட்ட வளமாகும்**

01. நீரின் பயன்கள் எவை?

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

02. நீர் பயன்படுத்தப்படும் கைத்தொழில்கள் 2 தருக?

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

03. தாவரங்களின் நிலவுகைக்கு நீரின் முக்கியத்துவங்கள் எவை?

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

04. கடல் நீரில் கரைந்துள்ள உப்பின் பெயர் யாது?

……………………………………………………………………………………………………………………………

05. உப்பு எவ்வாறு பிரித்தெடுக்கப்படுகின்றது?

……………………………………………………………………………………………………………………………

(4+4+4+4+2+ 2= 16 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page